REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
ஐந்தாம் ஆண்டு மலர்
சென்ற ஆண்டினும் சிறப்பாக
15-6-57 அன்று வெளிவருகிறது
★
விவரங்கள் அடுத்து

மலர் 4] சென்னை: வைகாசி 25உ வெள்ளி (7—6—57) ★ ★ வெளியூர்: வைகாசி 26உ சனி (8—6—57) [இதழ் 307

அரிசி விலையை ஏற்ற கொள்ளை இலாபக்காரர் சதி?

ஆயிரக்கணக்கான மணங்கு அரிசி இரயில் நிலையங்களில் முடக்கம்

மேற்கு வங்க சர்க்கார் எச்சரிக்கிறது

கல்கத்தா, ஜூன் 6—

கொள்ளை இலாப நோக்கம் கொண்ட சிலர், வெளிப்பிரதேசங்களிலிருந்து வரவழைத்த அரிசியை இரயில்வே நிலையத்திலேயே முடக்கிவிட்டு டெலிவரி எடுக்காமல் இருந்துவருவதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

விலைவாசிகள் நகரில் இறங்கிவருவதாயும் அதைக் கண்டு அரிசியை முடக்கி விலைகளை ஏற்றும் நோக்குடன் பல வியாபாரிகள் சுமார் 1,70,000 மணங்கு அரிசியை டெலிவரி எடுக்காமல் இரயிலடியிலேயே வைத்திருக்கிறார்களாம்.

இரயில் நிலையத்திலேயே இவ்வளவு அரிசியை முடக்க நினைப்பவர்கள் தங்கள் கிடங்குகளில் எவ்வளவு அரிசியை முடக்கிவைத்திருக்கிறார்களோ?

இந்த வியாபாரிகள் ஜூன் 10-ந் தேதிக்குள் அரிசி மூட்டைகளை டெலிவரி எடுத்துக்கொள்ளாவிட்டால் அவற்றை பறிமுதல் செய்வோம் என்று மேற்கு வங்க சர்க்கார் எச்சரிக்கை விடுத்துள்ளனராம்.

இலங்கை மொழிப் பிரச்சினைக்கு தீர்வுகாண

வட்டமேஜை மாநாடு கூட்டவேண்டும்

தமிழர் போராட்டத்தைக் கண்டித்து டட்லி யோசனை

கொழும்பு, ஜூன் 6—

இலங்கையிலுள்ள மொழிப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு வட்டமேஜை மாநாடு கூட்டவேண்டுமென முன்னாள் இலங்கைப் பிரதமர் டட்லி சேனநாயகா தெரிவித்துள்ளார். பெடரல் கட்சியினர் 'சத்தியாக்கிரகம்' செய்யப்போவதாக விடுத்துள்ள அறிக்கையைப் பற்றி பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழர்கள் கோரிக்கை நிறைவேறுதென்றும் அவர்களுடைய போராட்டம் பயனற்றதாகப் போகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அவர் குறிப்பிட்டதாவது:—

"பிரஸ்தாப போராட்டத்தால் இலங்கையில் பல்வேறு சமுதாயத்தினரிடையே உள்ள நல்லெண்ணம் பாதிக்கப்படும்.

"பெடரல் கட்சியினர் கோரும் நான்கு கோரிக்கைகளைப் பற்றியும் டட்லி குறிப்பிட்டார். அவர்கள் சமஷ்டி அரசியல் அமைப்புடன் பூரண பிரஜா உரிமையும், ஓட்டு உரிமையையும் கோருகின்றனர். இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால் பெரும் பகுதி. தமிழர்கள் கண்டி பகுதிகள் தனித் தமிழ் இராஜ்யமாக சமஷ்டி அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்டுவிடும். மேலும் இந்த ஜில்லாக்களில்தான் அதிகமான தேயிலையும் உற்பத்தியாகிறது. ஆகையால் இந்தக் கோரிக்கையை நிச்சயம் நிறைவேற்ற முடியாது.

"இந்திய தோட்டத் தொழிலாளர்கள் சம்பந்தமான பிரஜா உரிமை குறித்தும் ஓட்டுரிமை குறித்தும் 1948லேயே சட்டம் இயற்றப்பட்டது. தன்னுடைய கட்சி அந்த கொள்கையை கடைப்பிடித்தும் வந்தது.

"தமிழ் மொழிக்கு உரித்தான இடத்தைக் கொடுக்கவேண்டும் என்பது வேறு பிரச்சினையாகும்."

சர்க்காரின் நிலக் காலனித் திட்டத்தைப் பற்றி பேசுகையில், இடநெருக்கடியான இடங்களிலிருந்து நெருக்கமில்லாத இடங்களுக்கு குடியேற்றம் முதலில் ஆரம்பிக்கப்பட்டதென்றார். ஆனால், இதில் தமிழர் பகுதிகளில் சிங்களவர்களை குடியேற்றும் நோக்கம் எதுவும் இல்லையென்றும் குறிப்பிட்டார்.

பிரஸ்தாப மொழிப் பிரச்சினையையும் நாட்டின் பிரச்சினைகளையும் கலந்து ஆலோசிக்க ஒரு வட்டமேஜை மாநாடு நடத்த வேண்டுமெனவும் அவர் கூறினார்.

கவர்னர் மாற்றங்கள்

புதுடில்லி ஜூன் 7—

தற்போதைய ஒரிசா கவர்னர் பீம்சேன் சச்சார் ஆந்திர கவர்னராக நியமிக்கப்படலாம். அடுத்த மாத இறுதியில் பதவியிலிருந்து விலகும் ஆந்திர கவர்னர் திரு. சி. எம். திருவேதியின் பதவியை இவர் ஏற்பார்.

திட்டக் கமிஷன் காரியதரிசி ஒய். என். அக்தாங்கர் ஒரிசாவின் கவர்னராக நியமனம் பெறலாம். முன்பு இவர் அஸ்ஸாம் கவர்னராகலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது.

கேரள சர்க்காரின் வரவு-செலவுத் திட்டம்

முன்கூட்டியே வெளியானதாகக் குற்றச்சாட்டு

திருவனந்தபுரம், ஜூன் 6—

கேரள சர்க்காரின் வரவு செலவுத் திட்டங்கள், சட்டசபையில் தாக்கலாகுமுன் வெளியாகிவிட்டதாகக் கூலப்படுகிறது.

இதுபற்றிக் குறிப்பிடுகையில் பி. சோ. தலைவர் பட்டம் தாணுப் பிள்ளை, இந்தத் தகவல் உண்மையானால் இது மிகவும் முக்கியமான விஷயமாகும். பட்ஜெட் இரகசியங்களைக்கூடக் காப்பாற்ற முடியாத ஒரு சர்க்கார் பதவியில் நீடிக்க அருகதையே இல்லை. ஜனநாயக சம்பிரதாயப்படி நிதி மந்திரியேனும் இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

காங்கிரஸ் தலைவரான பி. டி. சாகோ இதுபற்றிக் குறிப்பிடுகையில், இதற்கு முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டியவர்கள் மந்திரி சபையினரே என்றும், பட்ஜெட் வெளியான பிறகு எந்த மந்திரியும் பதவியில் நீடிப்பதில்லை என்றும் கூறியிருக்கிறார்.

உணவு உற்பத்தி பெருகியுள்ளதாம்

புதுடில்லி, ஜூன் 6—

1947-லிருந்து 1952 வரையிலான ஐந்து ஆண்டுகளின் சராசரி உணவுப் பொருள் உற்பத்தியைவிட கடந்த ஐந்து ஆண்டுகளில் சராசரி 130·1 இலட்சம் டன் உணவுப் பொருள் உற்பத்தி அதிகரித்துள்ளது என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திர தமிழக எல்லைத் தகராறு

தீர்வுகாணுவதில் மீண்டும் முட்டுக்கட்டை!

ஐதராபாத், ஜூன் 6—

தமிழகத்திற்கும் ஆந்திரத்திற்குமிடையே உள்ள எல்லைத் தகராறுகள் எதிர்பார்த்தபடி இந்த திங்கள் 15-ந் தேதிக்குள் முடியும் என்று கருதுவதற்கில்லை என்று தெரிகிறது.

ஆந்திர முதல்வர் சஞ்சீவி ரெட்டி பேசியிருப்பதிலிருந்து, தீர்வுகாணுவதில் மீண்டும் முட்டுக்கட்டை ஏற்படும் போலத் தெரிகிறது.

கடலிலிருந்து காவேரிவரை ஒரேயடியாகப் பிரச்னையை முழுவதுமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு ஒரேயடியாகப் பரிகாரம் தேடவேண்டும் என்று ஆந்திர முதன் மந்திரி சஞ்சீவி ரெட்டி கூறியிருக்கிறார்.

ஆந்திர சர்க்கார் கோருகிற ஹோசூரையும் சென்னை சர்க்கார் கோருகிற திருத்தணியையும் மட்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு முடிவு தேடுவதைத் தாம் எதிர்ப்பதாகவும் ஆந்திர முதல்வர் தெரிவித்திருக்கிறார்.

தான் இந்தக் கருத்தை, மத்திய மந்திரி பதவியஸ்தரான படாஸ்கர் வரும்போது, தெளிவாகத் தெரிவித்துவிடப் போவதாயும் கூறியிருக்கிறார்.

தமிழர்வாழ் பகுதியெல்லாம் துக்கநாள்

'சிங்களம் மட்டுமே' சட்டத்திற்கு இலங்கைத்தமிழர் காட்டிய எதிர்ப்பு

பல்லாயிரக்கணக்கில் கூடி கண்டன முழக்கம்

கொழும்பு, ஜூன் 6—

"எங்கு நோக்கினும் கருப்பு! வீடுகள், பெரிய கட்டிடங்கள், அங்காடிகள் இங்கெல்லாம் கருப்புக் கொடிகள்.

வண்டிகள், வாகனங்களில் எல்லாம் கருப்புக் கொடிகள்.

இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் எல்லாம் இந்தக் காட்சி இன்று கிடைத்திருக்கிறது.

தமிழின் உரிமையைப் பறிக்கும் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்ற சட்டம் நிறைவேறி ஓராண்டான இன்றைய நாளை இலங்கைத் தமிழர்கள் கருப்புக் கொடிகளுடன் துக்க நாளாகக் கொண்டாடியிருக்கின்றனர்.

ஊர்வலங்கள், துக்க சங்கீதத்துடனும், சிங்கள மொழி வெறி ஒழிக-தமிழ் வாழ்க என்ற கோஷங்களுடனும் தமிழர் வாழும் நகரங்களில் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன.

யாழ்ப்பாணம், திரிகோணமலையில் எல்லாம் இந்த துக்க நாள் விழா வெகு அமைதியாகவும் சிறப்பாகவும் நடைபெற்றுள்ளது.

மாபெரும் பொதுக் கூட்டங்களில் ஆட்சியாளரின் 'சிங்களம் மட்டுமே' சட்டத்திற்கு பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கூடி நின்று தங்களின் எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றனர்.

விவேகமுடைய ஆட்சியாளருக்கு, இதைவிட நாகரிகமாக ஒரு மக்கள் கூட்டம் ஒரு சட்டத்திற்கு எதிராக தனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்க முடியாது என்ற வகையில், துக்க நாள் வெற்றிகரமாக இலங்கைத் தமிழரால் நடத்தப்பட்டிருக்கிறது.

★

பத்திரிகை அலுவலகம் சோதனையிடப்பட்டது

திருவனந்தபுரம்—

மலையாள தினப் பத்திரிகையின் அலுவலகத்தை நேற்று போலீசார் சோதனையிட்டிருக்கின்றனர்.

இந்தப் பத்திரிகையில் ஜூன் 7-ந் தேதி சர்க்கார் வெளியிடவிருக்கும் வரவு-செலவுத் திட்ட விவரங்கள் சில முன்கூட்டியே நேற்றைய தினமே வெளியிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அலுவலகத்திலிருந்து சில தஸ்தாவேஜுகளையும் கைப்பற்றிச் சென்றிருப்பதுடன், பத்திரிகாசிரியர் மீதும் நிர்வாகிகள் மீதும் வழக்கு ஒன்றும் தொடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 7—6—57 வெள்ளி

என்ன செய்யப்போகிறீர்?

'இன்புளுயன்சா'.

ஆம்; ஆங்கிலம் கற்றவர்களும் கல்லாதவர்களும், உலகத்தின் எந்தப் பகுதியில் வாழும் மக்களும் தங்களையறியாது தெரிந்துகொண்ட இந்தச் சொல், ஒருவகையான நச்சுக் காய்ச்சலின் பெயராகும். அதனுல்தான் இந்தப் பெயரைக் கேட்டவுடன் மக்கள் மருளுகின்றனர்.

இன்று உலகத்தை நோக்கி வேகமாக காட்டுத் தீ போல பரவிடும் இந்த பயங்கரப் பிணி மனித சமுதாயத்தை வாட்டியும், வேதனைப் படுத்தியும், வாழவிடாமலும், வதைத்து வருகிறது. இந்த நோய் பற்றி 'உலக சுகாதார நிறுவனம்' கவலை தெரிவிக்கும் அளவிற்கு நிலைமை வளர்ந்துள்ளது.

'இந்த நோய் பரவுவதை தடுக்க முடியும்' என்று உறுதியாக கூற முடிய வில்லையே என்று கவலைதோய்ந்த கருத்துக்களை உலக சுகாதார நிறுவனம் இன்று வெளியிட்டுள்ளது. டோக்கியோ, யோகோஹாமா, ஒகாசா, ஆங்காங், தெய்வான், சிங்கப்பூர், போர்னியோ, சுமத்திரா, சயாம், வியட்நாம், பிலிபைன்ஸ், இன்னும் எத்தனையோ நாடு நகரங்களைச் சுற்றி வந்துவிட்டது இந்த கொடிய 'இன்புளுயன்சா'. அத்துடன் அது ஓயவில்லை; இந்தியா நோக்கியும் சென்ற திங்களில் புறப்பட்டது, சிங்கப்பூரிலிருந்து! தடுக்க முயன்றனர் கப்பலை நடுக்கடலில் நிறுத்தி. ஆனுல் எப்படியோ தப்பி வந்துவிட்டது சென்னைக்கு. ஆம்! பஞ்சம் இல்லா நாடு, பட்டினி இல்லா வீடு, பிணி இல்லா வாழ்வு, என்ன என்பதை காணத் துடித்தும், உள்ளதைக் கொண்டு நல்லதோர் வாழ்வு வாழ வேண்டும் என்ற நல்ல பண்பு நிறைந்த நாட்டினரிடையே, பண்டைய பெருமைகளை எண்ணிப் பார்த்து நமக்கும் நல்ல காலம் உண்டு என்ற நம்பிக்கையிலே நாட்டை மீட்டிட வேண்டும் என்ற நல்லவர்கள் வாழும் தமிழகத்திலே முதல் முதலாக புகுந்து விட்டது.

தமிழகம் வந்தாரை மட்டும் தான் வாழவைக்குமா? இன்றைய ஆட்சியாளர் வந்த நோயையும் வாழவைத்தனர்! இன்று தென்னுடு முழுதினும் சுற்றி, வடநாடு சென்றுள்ளது 'இன்புளுயன்சா'. 'இப்படி ஒரு கொடிய நோய் பரவி வருகிறதே என்ன செய்தீர், என்ன செய்யப் போகிறீர்?' என்று வினவினர் மக்கள் சபையில்.

'ஒன்றும் கவலை வேண்டாம். செய்ய வேண்டியதை செய்துள்ளோம்' என்று எப்போதும் தரும் பதிலைத் தந்தனர் ஆட்சியாளர். இன்று, ஆட்சி பீடத்தின் கேந்திரமாக விளங்கும் டில்லியில் 'இன்புளுயன்சா' என்று பத்திரிகைகள் செய்தி தருகின்றன. அது மட்டுமா. கல்கத்தா, பம்பாய், போன்ற பெரிய வடநாட்டு நகரங்களிலும் மக்கள் அவதியுறுகின்றனர். ஏன் இந்த நிலை? யார் இதற்கு பொறுப்பாளிகள்? எவர் குற்றத்திற்காக இன்று பொதுமக்கள், துன்பக்கேணியில் தீராத் துயரத்துடன் துடிக்கும் புழுக்களாய் திகழ்வது? நாட்டின் சுகாதாரத்திற்கென திட்டத்தில் பணம் ஒதுக்கப் பட்டுள்ளது. நாடெங்கும் விஞ்ஞானிகள், டாக்டர்கள், சுகாதார அதிகாரிகள் இலாகாக்கள் உள்ளன. இருந்தும் இந்த நிலை ஏற்படுவானேன்? இத்தகைய வியாதி 1918-ல் ஒருமுறை வந்ததாமே. அப்போது அரசாங்கம் என்ன செய்தது என்பது பழைய அரசாங்க தஸ்தாவேஜிகளில் காணப்படாதா? மக்கள் நலனில் அக்கறை கொண்டோர், நாட்டின நன்மையை ஊக்குவிப்பவர், எதிர்காலத்தை செழுமையாக்குபவர்களாக பறைசாற்றிக் கொண்டோர், நிலைமையை ஆராய்ந்து தடுப்பு நடவடிக்கைகளில் அக்கறையும், நாட்டமும், நல்லெண்ணமும் காட்டியிருந்தால், இன்று காணப்படும் சோகக் காட்சிகளை தவிர்த்திருக்கக் கூடும்.

தொத்து நோய்களை பொறுத்தமட்டில் உடனடியாக மேற்கொள்ள வேண்டியது தடுப்பு முறைகள். இதைப் பற்றிய அக்கறையே இப்போது தான் ஏற்பட்டுள்ளது. நாள் தோறும் தடுப்பு முறைகளில் ஒவ்வொன்ருக அமுலாக்கப்படுகிறது.

வீட்டுக்கு வீடு நோய் பரவிய பிறகு, பாமர மக்கள் அவதியுற்றும் அல்லல்பட்டும் அறிந்த முறைகளைக் கையாண்டு தப்பிப் பிழைத்து வரும் இந்த கட்டத்தில்கூட தக்க தடுப்பு முறைகளையும், வைத்திய வசதிகளையும் அரசாங்கம் செய்யவேண்டிய அளவிற்கு செய்யவில்லை. இப்போதுகூட நோய் பரவாதிருக்கும் பகுதிகளில் உள்ள மக்களுக்கு முன் எச்சரிக்கையாக தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

உடனடியாக வைத்திய நிபுணர்கள், சுகாதார அதிகாரிகள், விஞ்ஞானிகள், மாவட்ட கலெக்டர்கள், மற்றும் பொது சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் அனைவரும் ஒன்றுகூடி கலந்து பேசி, விவாதித்து பாமர மக்களுக்கு அறிவுறுத்த வழிகோல வேண்டும். நாடு முழுவதும் தடுப்பு முறைகளையும், மற்றும் வைத்திய முறைகளையும், பொது மக்களுக்கு அறிவிக்க பொதுத் தொண்டில் ஈடுபட்டுள்ள சமூக ஊழியர், சாரணர், மாணவர், மற்றும் பொது நிறுவனங்களின் உதவியையும், ஆதரவையும் அரசாங்கம் பெறுவதன்மூலம் எளிய முறையில் பெரிய காரியத்தை, நல்லபடி முடிக்க வாய்ப்பாக அமையும்.

இந்த நோய் குணமடைய உலக சுகாதார நிறுவனம் தயாரித்துவரும் மருந்து மக்களுக்கு பயன்பட செய்ய வேண்டியது மத்திய அரசாங்கத்தின் இன்றைய பெரிய பொறுப்புகளில் மிகவும் முக்கியமான பொறுப்பாகும். சுகாதாரத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகையை மக்களுக்கு வாழ்வளிக்க பயன்படுத்த வேண்டும். சென்னை அரசாங்கமும் நாட்டில் நிலவிடும் நிலைமையை உணர்ந்து, ஆபத்தை தவிர்த்து மக்களின்கண்ணீரைத் துடைக்க முன்வர வேண்டும். நாடு நாடாக, மக்கள் மக்களாக, வாழ்வு வாழ்வாக அமைய அரசாங்கத்தின்கவனத்தை 'இன்புளுயன்ஸா' பக்கம் திருப்ப வேண்டுகிறோம்.

'அடுத்த 2 ஆண்டுகள் சோதனை காலம்'

பண்டித நேருவின் படப்பிடிப்பு

புதுடில்லி, ஜுன் 6—

இந்தியாவின் பேராசை, திட்டமாக ஊருவாக்கப்பட்டுள்ள இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி வசதியை இந்த நாட்டு மக்களிடமே தேடிக்கோண்டு திட்டத்தை நிறைவேற்ற கடைசி முடிவிற்கு மத்திய அரசாங்கம் வந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

தற்போது நாட்டில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடியிலும், மற்றும் இதர தொல்லைகளுக்கு இடையிலும் மக்கள் பெரிய காரியத்தை பற்றித் தெரிந்து கொண்டு தொல்லைகளை தாங்கி, திட்டத்தை நிறைவேற்ற முன்வரவேண்டியது அவசியமாகும் என்று பண்டித நேரு மக்கள் மீது திட்டத்தை நிறைவேற்றும் பாரத்தை சுமத்தியுள்ளார்.

"அடுத்த இரண்டு ஆண்டுகள் மிகவும் கஷ்டங்கள் நிறைந்ததாகயிருக்கும். ஆனுல், அதற்கு அடுத்த ஆண்டில் இருந்து மக்கள் தங்களின் கஷ்டங்களுக்கு ஏற்ற பயனை ஓரளவிற்கு அடையக்கூடும்" என்று, மக்களுக்கு வருங்காலத்தைப் பற்றி படம் பிடித்துக் காட்டியுள்ளார் நேரு.

இரயில் விபத்துகள் பற்றி விசாரணை

அரசாங்க அதிகாரி விளக்கம்

புதுடில்லி, ஜுன் 6—

1955—56-ம் ஆண்டில், இந்திய இரயில்வேக்களில் ஏற்பட்ட விபத்துக்களில், பத்து விபத்துக்கள் சம்பந்தமாக சட்ட ரீதியான விசாரணைகள் நடத்தப்பட்டனவாம்; அதற்கு முந்திய ஆண்டில் 16 விபத்துக்கள் சம்பந்தமாக விசாரணை நடத்தப்பட்டதாம். இரயில்வேக்களில் பிரயாணி வண்டிகளுக்கு ஏற்படும் விபத்துக்களால், பிரயாணிகளுக்கு உயிர் நஷ்டமோ, படுகாயங்களோ ஏற்படும் விபத்துக்களையும், ரூ. 20,000-க்கும் அதற்கு மேற்பட்டும் இரயில்வேக்களின் சொத்துக்களுக்கு நஷ்டமேற்படும் விபத்துக்களையும் முறையான விசாரணைகள் நடத்தப்படுகின்றனவாம். மேலும் விசாரணை நடத்தவேண்டியது அவசியம் என்று அரசாங்க 'இன்ஸ்பெக்டர்' கருதும் விபத்துக்கள் சம்பந்தமாகவும் அவர் விசாரணை நடத்தலாமாம்.

இந்திய இரயில்வேக்களில் 1955—56-ம் ஆண்டில் மொத்தம் 13,535 விபத்துக்களும், அதற்கு முந்திய ஆண்டில் 12,922 விபத்துக்களும் ஏற்பட்டனவாம்.

அரசாங்க முதல் 'இன்ஸ்பெக்டர்' விசாரணை நடத்திய 10 விபத்துக்களில் 4 விபத்துக்கள் இரயில்கள் ஒன்றேடொன்று மோதிக்கொண்ட காரணத்தாலும், 5 விபத்துக்கள் வண்டிகள் தடம் புரண்டதினுலும், ஒரு விபத்து 'லெவல் கிராசிங்'கில் இரயிலும் ஒரு வண்டியும் மோதியதாலும் ஏற்பட்டனவாம்.

இரயில்கள் மோதிக்கொண்டதற்கு இரயில்வே ஊழியர்கள் தங்கள் கடமைகளைச் செய்யத் தவறியதுதான் காரணம் என்று அரசாங்க முதல் 'இன்ஸ்பெக்டர்' அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. தடம்புரண்ட விபத்துக்களில் இரண்டு விபத்துக்கள் வண்டிகளிலுள்ள குறைகள் காரணமாயும், ஒரு விபத்து, தண்டவாளத்தில் யாரோ 'கோளாறு' செய்திருந்தபடியாலும், ஒரு விபத்து நிரந்தரப் பாதை கெட்டுவிட்டதாலும், மற்றொன்று ஒரு பாலம் பழுதுபட்டதாலும் ஏற்பட்டனவாம்.

விசயவாடா, ஜுன் 3—

கட்சிகள் அனைத்தும் பதவியை கைப்பற்றுவதையே இலட்சியமாக கொண்டுள்ளனவாம். சர்வோதயத்திற்காக உழைப்பதே அவருடைய இலட்சியமாம். கட்சி முறைகளுக்கு சர்வோதய கொள்கை மாறுபட்டதாம். இவ்வாறெல்லாம், ஜெயப் பிரகாஷ் நாராயண் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு வைத்திய முறையில் ஆராய்ச்சி

பல நிறுவனங்களுக்குப் பண உதவி

புதுடில்லி, ஜுன் 4—

உள்நாட்டு வைத்திய முறைகளில் ஆராய்ச்சி வேலைகள் நடத்திவருகிற நிறுவனங்களுக்கு 1957-58ல் உதவி மானியங்கள் வழங்குவதற்காக இந்திய சர்க்கார் மொத்தம் ரூ. 4,50,000 அனுமதித்திருக்கின்றனர்.

ஜாம் நகரிலுள்ள மத்திய ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்துக்கு 2 லட்சம் ரூபாயும், அங்கேயே, உள்ள பிற்காலப் பயிற்சி நிலையத்துக்கு ஒரு லட்சம் ரூபாயும் மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. திருவனந்தபுரத்திலுள்ள சர்க்கார் ஆயுர்வேதக் கல்லூரிக்கு 30,000 ரூபாயும், காசி இந்து சர்வகலாசாலைக்கு 10,000 ரூபாயும் ஆயுர்வேத வைத்தியமுறை ஆராய்ச்சிக்காக மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கல்கத்தாவிலுள்ள டி.என்.டி. ஹோமியோபதிக் கல்லூரி—ஆஸ்பத்திரிக்கு 10,000 மானியம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது; டில்லியிலுள்ள ஆயுர்வேதிக்—யுனுனி திப்பியா கல்லூரிக்கு ஒரு லட்சம் ரூபாய் மானியம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

கேரளம் குறைத்துக் கொண்டதாம்!

ரூ. 130 கோடி போதுமாம்

புதுடில்லி, ஜுன் 6—

இரண்டாவது 5 ஆண்டுத் திட்டத்தின் கீழ் கேரளமாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 87 கோடியாகும். இந்தத் தொகை போதுமானதல்ல என்று முறையிட்டு ரூ. 200 கோடி வேண்டும் என்று கேரளம் கேட்டிருந்தது.

மீண்டும் நிலைமையை ஆராய்ந்து ரூ. 130 கோடியேனும் நிச்சயம் தேவைப்படும் என்று மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துரைத்துள்ளதாம்.

திட்டக் குழுவுடன் கலந்து பேசிய பின்னர் கேரள முதலமைச்சர் இந்த முடிவுக்கு வந்துள்ளார் என்று தெரிய வருகிறது.

குடிசைத் தொழில்கள், மீன்பிடிப்பு, கயிறு திரித்தல், முதலியவற்றிற்காக கூட்டுறவு முறைகளை மேற்கொள்ளவும்; நவீன விஞ்ஞான முறையில் சாகுபடியை திருத்தவும்; சப்பானிய முறையில் சாகுபடியை நடத்தவும்; சிறு நீர்பாசன திட்டங்களை மேற்கொள்ளவும்; தொழில் துறையில் சைக்கிள் உற்பத்தி, டயர் உற்பத்தி காகித உற்பத்தி முதலியன சிறு தொழில்களாக மேற்கொள்ளவும் அரசாங்கம் கருதுவதாக முதலமைச்சர் நம்பூதிரிபாட் தெரிவித்துள்ளார்.

திட்டக்குழு கேரளத்திற்கு கூடுமானவரை ரூ. 130 கோடி ஒதுக்குவதற்கு முயற்சிக்கும் என்று தெரிய வருகிறது.

அணு ஆயுதசோதனைகள்

அமெரிக்கத் தலைவர் கருத்து

வாஷிங்டன், ஜுன் 6—

அடிக்கடி அணு ஆயுதச் சோதனைகளில் வல்லரசுகள் ஈடுவடுவதால் உலக மக்கள் அணுக் கதிரியக்கத்தினுல் பாதிக்கப்படுவதும் அகிலமெங்கும் அணு ஆயுதச் சோதனைகளுக்கு எதிர்ப்பும் கண்டனமும் பெருகிவருவது தெரிந்ததே.

'நல்ல பலன்' தரக்கூடிய அணு ஆயுதக் குறைப்பு சம்பந்தமாக வல்லரசுகளுக்கிடையே ஒப்பந்தம் ஏற்படுவதன்மூலம் தற்போது இழைக்கப்படும் தீங்கு அகற்றப்படுமாம்.

அத்தகைய உடன்பாடு ஏற்பட வேண்டும் என்று அமெரிக்கத் தலைவர் ஐக் விருப்பம் தெரிவித்துள்ளார்.

ஆந்திரத்தில் உணவு நெருக்கடி!

ஐதராபாத், ஜுன் 6—

ஆந்திர மாநிலத்தில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியை சமாளிப்பதற்காக 40,000 டன் அரிசியும், 25,000 டன் கோதுமையும் வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடம் ஆந்திர அரசாங்கம் வேண்டியுள்ளது என்று தெரிய வருகிறது.

ஐதராபாத்தில் அரிசியின் விலை உயர்ந்துகொண்டேபோகிறதாம்.

தேவையான உணவுப்பொருள்கள் நியாய விலைக் கடைகளின் மூலம் தர ஏற்பாடாகி வருகிறது என்று தெரியவருகிறது.

சோடா தொழில் தகராறில் சமரசம்

திருச்சி அண்டு கும்பகோணம் காளி மார்க் சோடா தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் கோரிக்கை சம்பந்தமாக தொழில் தகராறு இருந்து வந்தது. டை கோரிக்கை சம்பந்தமாக இன்று தொழில் சமரச அதிகாரி திரு. ராமலிங்கம் முன்னிலையில் சமரசம் ஏற்பட்டது.

தொழிலாளர்கள் சார்பில் பழரச பானத் தயாரிப்பு அண்டு பொதுத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் எம். எஸ். மணி அவர்களும், நிர்வாகத்தின் சார்பில் வி. பி. கணேசன் அவர்களும் கலந்துகொண்டார்கள். கோரிக்கைகள் நிறைவேற்றிக் கொடுப்பதென ஒப்பந்தம் செய்யப்பட்டது.

ஆகஸ்ட் மாத முடிவுக்குள் முடிந்துவிடும் என எதிர்பார்க்கப்படும் அணுசோதனைத் தொடரின் அடுத்த சோதனைக்கான ஏற்பாடுகளை கிறிஸ்மஸ் தீவில் பிரிட்டன் செய்துவருவதாகத் தெரிகிறது.

அண்ணா சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

★

பாலகிருஷ்ணம்பட்டி:

30—5—57 வியாழன் பிற்பகல் 1 மணிக்கு பாலகிருஷ்ணம்பட்டி பழங்குடி மக்கள் பகுதியில் தோழர் மாணிக்கம் அவர்கள் தலைமையில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது. தாய்மார்கள் ஏராளமாக வந்திருந்து சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்தனர்.

தோழர் கரிவண்டன் அவர்களின் பெண் குழந்தைக்கு அறிஞர் அண்ணா அவர்களால் 'தமிழ் செல்வி' என்று பெயர் சூட்டப்பட்டது. சேலம் தேர்தல் வழக்கு நிதிக்கு தோழர் மாணிக்கம் அவர்களால் புதுக்காசு 100-ம் ராலணா காசு மாலை ஒன்றும் (0—11—3) அளிக்கப்பட்டது. அண்ணா அவர்கள் வரவேற்புக்கு நன்றி கூறி கழக லட்சியத்தை எடுத்துக் கூறினார்கள்.

விசுவாம்பாள் சமுத்திரம்:

2 மணிக்கு விசுவாம்பாள்சமுத்திரம் பழங்குடி மக்கள், மாணவர்கள் சார்பில் மாலை அணிவித்து, வரவேற்பு இதழ் வாசித்து அளிக்கப்பட்டது. அவ்வூரில் உள்ள வாய்க்காலில் கலிங்கி சரியாக இல்லாததால் அதை போடுவதற்கானவைகளை செய்யும்படி முதியவர் ஒருவர் வேண்டிக்கொண்டார். அண்ணா அவர்கள் மக்களிடம் கையெழுத்து வாங்கி அப்பகுதி எம். எல். ஏ.-க்கும், தி. மு. க.-விற்கும் அனுப்பிவைக்குமாறும், இதற்கான முயற்சியை தாமும் செய்வதாகவும் தெரிவித்தார்.

வளையப்பட்டி:

2-30 மணிக்கு, வளையப்பட்டி தி. மு. க. திறப்பு விழா தோழர் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது அறிஞர் அண்ணா அவர்கள் சொற்பொழிவு ஆற்றினார்கள். கைத்தறி துண்டு, மலர் மாலைகள் அணிவித்து வரவேற்பு இதழ் வாசித்து அளிக்கப்பட்டன.

வயிரிசெட்டிபாளையம்

3 மணிக்கு வயிரிசெட்டிபாளையத்தில் அண்ணா அவர்களுக்கு மாலை அணிவித்து, பாராட்டுரை வழங்கினர். தோழர் துரைராஜ் அவர்கள் தலைமையில் அண்ணா அவரகள் கழகத்தின் சார்பில் நின்ற தோழர்கள், முத்துகருப்பன், துரைராஜ் ஆகியவர்களுக்கு நல்ல உள்ளம் படைத்த மக்கள் ஏராளமாக வாக்குகள் வழங்கியதற்கு நன்றி தெரிவித்து, காங்கிரஸ்காரர்கள் பணபலத்தாலும், அதிகார ஆதிக்கத்தாலும் வெற்றி பெற்றுவிட்டதை எடுத்துக்கூறி 'ஏழை—எளிய மக்களின் கட்சி தி. மு. கழகம். அதை வலிவுள்ளதாக்கவேண்டிய பொறுப்பு உங்களைச் சேர்ந்தது; உங்களுடைய பணிகளை ஆற்றுவதற்கு தோழர் துரைராசுவும், முத்துக்கருப்பனும் கழகத்தின் சார்பில் இருக்கிறார்கள்' என்று கூறினார்கள். நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

திருச்சி:

இரவு 7 மணிக்கு திருச்சி இடத்தெருவில் இருதயராஜ் படிப்பகத்தை அண்ணா அவர்கள் திறந்துவைத்தார்கள். பல்லாயிரக்கணக்கான மாணவர்களும், தோழர்களும் வாழ்த்தொலி முழங்க கழகக் கொடியை ஏற்றினார்கள். இரவு 7-30 மணிக்கு இருதயபுரத்தில் நகரசபை துணைத் தலைவர் திரு. ஏ. பொன்னுசாமி (முதலியார்) அவர்கள் தலைமையில் அண்ணா அவர்கள் திரு. இருதயராஜ் அவர்கள் பெயரால் நிறுவப்பட்டுள்ள படிப்பகத்தை சிறப்பிக்கும் வண்ணம், செயலாற்றும்படியும் மறைந்த தோழர் இருதயராஜ் அவர்களின் தொண்டு பற்றியும், அவருக்கும் தனக்கும் இருந்த தொடர்பு பற்றியும் மிக உருக்கமாகப் பேசினார்கள். பல தோழர்கள் மாலையும், கைத்தறி ஆடையும் அணிவித்தார்கள். மேற்படி கூட்டத்தை சிறப்பான முறையில் நடத்துவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் தோழர்கள் சேவியர், ஆரோக்கியசாமி, மற்றும் படிப்பக தோழர்களும் செய்து முடித்தது பாராட்டிற்குரியது.

எல்லைத் தகராறு தீர்க்க அதிகாரி

சென்னை, ஜூன் 5—

சென்னை—ஆந்திர எல்லைத் தகராறு சம்பந்தமாக, மத்திய அரசாங்கம் நியமித்துள்ள படாஸ்கரிடம் சென்னை அரசாங்கத்தின் நிலைமையை எடுத்துரைக்க எஸ். வெங்கடேசுவரன் என்பவரை அரசாங்கம் நியமித்துள்ளதாக தெரிய வருகிறது.

ஆந்திரத்தில் படாஸ்கர் விசாரணை நடத்தும்போது இவர் கலந்துக் கொள்வாராம்.

இரயில் பாதை கண்காணிப்பு

புதுடில்லி, ஜூன் 5—

இரயில் பாதை கண்காணிப்பு சம்பந்தமாக ஒரு கிராம கண்காணிப்பு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

கிராம மணியக்காரர்கள் அல்லது வேறு நபர்களை நியமித்து இரயில் பாதைகளை கண்காணிக்க முடிவு செய்துள்ளனராம்.

'அமைதி நிலைநாட்டுவீர்!'

மதுரைத் தோழர்கள் எஸ். முத்து—ஏ. பி. பழனிச்சாமி வேண்டுகோள்

மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்களும் மதுரை நகர கம்யூனிஸ்டுக் கட்சிச் செயலாளர் தோழர் ஏ. பி. பழனிச்சாமி அவர்களும் கீழ்க்காணும் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்:—

சமீப காலத்தில் மதுரை நகரத்தின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய முறையிலும், நற்பெயருக்கு இழுக்கு ஏற்படும் முறையிலும் பல பலாத்காரச் செயல்கள் நடந்துள்ளன. இவை தி. மு. க.-வினருக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் அரசியல் குரோதத்தினால் நடக்கின்றன என்ற தோரணையும ஏற்பட்டு, பரஸ்பரம் இரு கட்சிகளின் கௌரவமும் பாதிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு பல சமூக விரோதிகள் நகர வாழ்வைக் கெடுத்து வருகின்றனர்.

இதை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் இந்த இரண்டு கட்சிகளின் பிரதிநிதிகளும் கூடி, இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறோம்.

இச்செயல்களை இரு கட்சிக்காரர்களும் வெறுத்துக் கண்டிக்கிறோம். இதுபோன்ற காரியங்களுக்கு இரு கட்சிகளும் எவ்வித ஆதரவும் கொடுக்கவில்லை—கொடுக்கப் போவதும் இல்லை என்று அறிவிக்கின்றோம். இரு கட்சிகளின் அங்கத்தினர்களும், அனுதாபிகள் என்று சொல்லிக்கொள்பவர்களும் அந்தந்த பிரதேசங்களில் எவ்விதமான பலாத்காரச் சம்பவமும் ஏற்பட அனுமதிக்காமல் உஷாராயிருந்து கூட்டு நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென்று வேண்டுகிறோம். எந்த சமூக விரோதியும் நமது கட்சிகளின் பெயரை உபயோகிக்கவோ அவைகளின் பின் மறைந்துகொள்ளவோ இடமளிக்காது ாதுகாப்பது கட்டாய அவசியம் என்று கருதுகிறோம்.

அவ்வாறு செய்வதன்மூலமே அதிகாரிகள் சமூக விரோதிகளைத் தன்மைப்படுத்தி தகுந்த நடவடிக்கை எடுப்பது சாத்தியமாகும் என்றும் குறிப்பிட விரும்புகிறோம்.

இரு கட்சி ஊழியர்களும் ஆங்காங்கு சேர்ந்து நின்று உஷார் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது உடனடிக் கடமை என்று வற்புறுத்துகிறோம்.

இப்படிக்கு,
எஸ். முத்து
ஏ. பி. பழனிச்சாமி

1956-57 எஸ். எஸ். எல். சி. பரீட்சை

55·5 சதவிகித மாணவர் தேர்வு

சென்னை, ஜூன் 6—

1957-ம் ஆண்டு மார்ச் திங்களில் நடைபெற்ற எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்கு மொத்தம் 59,374 மாணவர்கள் எழுதினராம்.

இன்று வெளியாகியுள்ள முடிவுகள்படி மொத்தம் 31,468 மாணவர்கள் மட்டுமே தேர்வு பெற்றுள்ளனர்.

மொத்தம் 27,906 மாணவர்கள் தேருதவர்கள். தேர்வு பெற்ற மாணவர்களின் சதவிகிதம் 55·5 ஆகும்.

திருமணங்கள்

திண்டுக்கல் தோழர் மா. தங்கவேலர்—கமலம்அம்மையார், ஜெயராமன்—வேலு அம்மையார் ஆகியோரின் திருமணம் 29-5-57 காலை 10-30 மணிக்கு, திண்டுக்கல் சோலை ஹாலில் சிறப்புற நடந்தேறியது. உள்ளூர் பிரமுகர்கள், கழகத் தோழர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டிருந்தனர்.

தோழியர் சத்தியவாணி முத்து எம். எல். ஏ., தலைமை வகித்துத் திருமண விழாவை நடத்தினர். மணமக்களைப் பாராட்டி, தோழர்கள் எஸ். முத்து, டி. ஆவுடையப்பன், பி. சமதர்மம், சந்தானம், என். வீ. நடராசன் ஆகியோர் பேசினர். இறுதி அண்ணா அவர்கள் மணமக்களைப் பாராட்டியும் சீர்திருத்த திருமணம் என்பது குறித்தும் விரிவுரையாற்றினர்கள்.

மணமகன் தங்கவேலர் நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

அன்பளிப்புகள்

சென்னை—வண்ணை 'சற்குண கபே' உரிமையாளர் தோழர் எஸ். பி. சாமியவர்கள் தனது புதல்வி எஸ்.பி. எஸ். சற்குணம், எஸ். எஸ். எல். சி. தேர்வில் வெற்றி பெற்றதற்கு மகிழ்ச்சி தெரிவிக்கும்முகத்தான் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 அன்பளிப்பாகக் கொடுத்தார்.

* * *

31—5—57ல், லால்குடி வட்டம், பச்சாம்பேட்டை கிராமத் தோழர் மருதை—தோழியர் வெள்ளையம்மாள் வாழ்க்கை ஒப்பந்த விழா தோழர் கே. ஏ. பி. சாமி தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

அன்பளிப்புகள் வரப்பெற்றோம்—மகிழ்ச்சி — நன்றி — பொறுப்பாளர்.

ரஷ்யாவில் விஞ்ஞான மருத்துவம்

சில தகவல்கள்

சோவியத் யூனியன் வைத்திய விஞ்ஞானப் பேரவை தான், சோவியத் டாக்டர்களின் மிகப் பெரிய ஆராய்ச்சிக் கழகமாகும். இதில் விஷ்னெவ்ஸ்கி இரண சிகிச்சைக் கழகமும், உடல் நூல் கழகமும் புற்றுநோய் சிகிச்சைக் கழகமும், உயிரின பௌதீகக் கழகமும், மற்றும் பல கழகங்களின் பிரிவுகளும் இணைக்கப்பட்டுள்ளன.

இதைத் தவிர, நாடு பூராவிலுமுள்ள ஆராய்ச்சி நிறுவனங்களிலும், வைத்தியக் கழகங்களிலும் நோய்த் தடுப்பு நிலையங்களிலும், உயர்தரக் கல்வி நிலையங்களிலும் வைத்தியத் துறை சம்பந்தமான பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இன்று சோவியத் யூனியனிலுள்ள 290 விஞ்ஞானக் கழகங்களிலும், உயர்தர வைத்தியக் கல்வி நிலையங்களிலும் 27,000க்கு மேற்பட்ட விஞ்ஞானிகள் வைத்தியத் துறை ஆராச்சிகளை நடத்தி வருகின்றனர்.

பல் வகை வியாதிகளை ஆராய்ந்து, அவற்றைக் தடுப்பதிலும், அவற்றிற்கு சிகிச்சை அளிப்பதிலும் பெரும் சாதனைகளைக் கண்டுள்ளனர் சோவியத் விஞ்ஞானிகள். பிளேக், காலரா முதலிய பயங்கர வியாதிகள் சோவியத் யூனியனில் அறவே ஒழிக்கப்பட்டுள்ளது. இதேபோல் மலேரியாவும் வெகுவாக ஒழிக்கப்பட்டுள்ளது. குடல் சம்பந்தமான தொத்து நோய்களும், நிமோனியா ஜுரமும், மெனின்ஜிட்டிஸும், கீழ்க் கட்டிகளும் பெருமளவுக்குக் குறைக்கப்பட்டுள்ளன. நோய்க் கிருமிகளுக்கு எதிராக இப்பொழுது வைத்திய விஞ்ஞானம் நிராயுதபாணியாக இருக்கவில்லை. நோய்க் கிருமிகளால் ஏற்படும் பல்வகை வியாதிகளைக் கண்டறிவதற்கான புதிய சீரம்களும் வாக்ஸைன்களும் உருவாக்கப்பட்டுள்ளன. 300-க்கு மேற்பட்ட பல்வகை கிருமிநாசினிகள் இப்பொழுது இருந்து வருகின்றன. இவற்றில் சில சோவியத் யூனியனில் கண்டுபிடிக்கப்பட்டவை.

இரண சிகிச்சையிலும் பெரும் சாதனைகள் ருஷியா கண்டுபிடித்துள்ளது. சிகிச்சை செய்யும் புதிய முறை இப்பொழுது உருவாக்கப்பட்டுள்ளது. சுவாசப் பைகளிலும், இருதயத்திலும் இரண சிகிச்சை செய்வது இப்பொழுது சர்வசாதாரணமாகிவிட்டது. நரம்புகளைத் தளர்த்தி ஆழ்ந்த நித்திரையை ஏற்படுத்தும் புதிய மருந்துகள் இப்பொழுது தயாரிக்கப்பட்டுள்ளன. இம்மருந்தை உட்கொள்பவர் முற்றிலும் உணர்ச்சியற்று மரக்கட்டை போல் ஆழ்ந்த நித்திரையில் மூழ்கிவிடுவார். இது இரண சிகிச்சை வைத்தியர்களுக்கும் மற்றப் பிரிவுகளைச் சேர்ந்த வைத்தியர்களுக்கும் பெரிதும் பயன்படுகிறது.

ஐயோடின், பாஸ்பரம் முதலியவற்றின் கதிரியக்கத் தமனிகளைக் கொண்டு, தைராயிட் சுரப்பி சம்பந்தமான வியாதிகளும், இரத்த சம்பந்தமான 'தீராத' வியாதிகளும் இப்பொழுது குணப்படுத்தப்படுகின்றன. உடலுறுப்பின் உறார்மோன் உற்பத்தி பாதிக்கப்பட்டால், செயற்கை உறார்மோன்களை உற்பத்தி செய்யும் முறைகள் இன்று உருவாக்கப்பட்டுள்ளன.

சோவியத் யூனியனில் 11 உயர்தர வைத்தியப் பயிற்சிக் கல்லூரிகள் உள்ளன. இவற்றில் 1956ல் மட்டும் 25,000 டாக்டர்கள் பயிற்சி பெற்றுள்ளனராம்.

நாட்டின் உயர்தரக் கல்வி நிலயங்களிலும், ஆராய்ச்சிக் கழகங்களிலும், வைத்தியக் கழகங்களிலும் 27,500 விஞ்ஞானிகள் பணியாற்றி வருகின்றனராம். இவர்களில் 2,549 பேர் வைத்திய விஞ்ஞான டாக்டர் பட்டம் பெற்றவர்கள்; 12,592 பேர் வைத்திய விஞ்ஞான காண்டிடேட் பட்டம் பெற்றவர்கள்.

ஈரானுக்கு நேரடியான விமானப் 'பார்சல்'

புதுடில்லி, ஜூன் 5—

இந்தியாவுக்கும், ஈரானுக்குமிடையே நேரடியான விமானப் 'பார்சல்' போக்குவரத்து இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தப் புதிய போக்குவரத்து ஆரம்பித்து வைக்கப்பட்டிருப்பதன் பலனாக, இவ்விரு நாடுகளுக்கிடையே விமானப் 'பார்சல்'களின் போக்குவரத்து துரிதப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நேரடியான விமானப் பார்சல் போக்குவரத்துக்கான கட்டண விகிதம், முதல் ஒரு பவுண்டு எடைக்கும் அதன் பகுதிக்கும் ரூ. 5·25; அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு நான்கு 'அவுன்சு'களுக்கும் அதன் பகுதிக்கும் ரூ. 1·0.

'HOMELAND'

(ஆங்கில வார இதழ்)

★

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியில் மற்றுமோர் புதிய கட்டம்—பொன்னான வாய்ப்பு

'ஹோம்லேண்ட்'

தாயகத்தின் எழிலும் வளமும், வாழ்வும் பண்பும், உரிமையும் சுதந்திரமும், வடநாட்டு எத்தரால் கொள்ளையிடப்படும் கொடுமையை உலகுக்கு உணர்த்த—உற்றாராம் ஆந்திர, கன்னட, கேரள சோதரர்களுக்கு அறிவுறுத்த

'ஹோம்லேண்ட்'

★

அண்ணா
அவர்களை
ஆசிரியராகக்கொண்டு

9-6-57 முதல் வெளிவருகிறது

இலங்கைசெல்ல ம.பொ.சி.க்கு தடை

அனுமதி ரத்து செய்யப்பட்டிருப்பதாக தகவல்

சென்னை, ஜூன் 6—

இலங்கையில் நடைபெறப் போகும் திருக்குறள் மாநாடு ஒன்றில் கலந்துகொள்வதற்காகப் புறப்பட இருந்த தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானத்திற்கு சிங்கள அரசாங்கம் தடை விதித்துள்ளது. இலங்கையின் எந்தத் துறை முகத்திலும் அவர் இறங்க அனுமதிக்க முடியாது என்றும் இலங்கை அரசாங்கம் அவருக்குக் கடிதம் மூலம் அறிவித்திருக்கிறது.

ம. பொ. சி. அறிக்கை

இதுபற்றி ம. பொ. சிவஞானம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:—

"இலங்கையில் இம்மாதம் 8-ந் தேதி முதல் 11-ந் தேதி வரை நடைபெறும் திருக்குறள் மாநாட்டிற்கு அழைக்கப்பட்டு இலங்கைக்குச் செல்ல இருந்தேன். அரசியல் கட்சி எதிலும் சம்பந்தப்படாத இலங்கை தமிழ்மறைக் கழகத்தினர் அந்த மாநாட்டை நடத்துகின்றனர்.

"கடந்த ஆறு ஆண்டுகளாகப் பிரதி ஆண்டுதோறும் நான் இம்மாநாட்டிற்குச் சென்று கலந்துகொள்வது வழக்கம். அதையொட்டியே இந்த ஆண்டும் அழைக்கப்பட்டேன்.

"இம்மாதம் 8-ந் தேதியன்று கொழும்புக்குப் புறப்பட சகல ஏற்பாடுகளும் செய்திருந்தேன். இந்திய அரசாங்கம் தந்த பாஸ்போர்ட்டை ஒட்டி, சென்னையில் உள்ள இலங்கை ஹைகமிஷனர் அலுவலகத்தார், கடந்த 3-ந் தேதியன்றே எனக்கு "விசா" கொடுத்திருந்தனர்.

ஆனால் இன்று (ஜூன் 6-ந் தேதி) சென்னையில் உள்ள இலங்கை ஹைகமிஷனர் அலுவலகப் பொது ஜனத் தொடர்பு அதிகாரி எனக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், முன்னர் அளிக்கப்பட்டிருந்த 'விசா' ரத்து செய்யப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் இலங்கையின் எந்தத் துறைமுகத்திலும் இறங்க என்னை அனுமதிக்க முடியாது என்றும் கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறது. 'விசா' ரத்து செய்யப்பட்டதற்கு எந்தக் காரணமும் சொல்லப்படவில்லை.

"இன்று இது சம்பந்தமாக பிரதமர் நேருஜிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளேன். அதில், இலங்கை இந்தியா நல்லுறவைப் பாதிக்கக்கூடிய இது போன்ற சம்பவங்கள் மேலும் நிகழாமல் தடுப்பதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன்"

டி. டி. கே. சென்ற விமானம்

விபத்துக்குள்ளாகியது!

புதுடில்லி, ஜூன் 6—

மத்திய நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி நாகபுரியிலிருந்து டில்லிக்குச் சென்ற விமானம் இன்று அதிகாலையில் திடீரென்று வான மண்டலத்திலிருந்து சுமார் 500 அடி தூரம் பூமியை நோக்கித் தலை கீழாகப் பாய்ந்தது. இதனால் விமானிகள் ஒருவர் மேலொருவர் விழ நேரிட்டதால் டி. டி. கே. அவர்களும் மற்ற பிரயாணிகள் 10 பேரும் விமான சிப்பந்தி ஒருவரும் சொற்ப காயமடைந்தனர்.

வானத்தில் பறந்து கொண்டிருந்த இந்த இந்திய 'ஸ்கை மாஸ்டர்' விமானம் வானத்தில் காற்று சூன்யப் பிரதேசத்தினுள் சென்றதால் பறக்கும் சாதனம் இழந்து விமானம் தலை கீழாக விழலாயிற்று. காற்றுப் பிரதேசத்தை அடைந்தபோதுதான் வழக்கப்படி பறந்தது.

இந்த விமானத்தில் 32 பிரயாணிகளும் 4 விமான சிப்பந்திகளும் இருந்தனர். விமானம் நாகபுரியிலிருந்து புறப்பட்டு 150 மைல் சென்றதும் இந்த விபத்து ஏற்பட்டது. அப்போது பிரயாணிகளில் பலர் ஆசனத்தில் அமர்ந்தபடி தூங்கிக் கொண்டிருந்தனர். விமானம் தலைகுப்புற பாய்ந்தபோது பிரயாணிகள் ஆசனங்களிலிருந்து விழுந்தனர். காயமடைந்தவர்களுக்கு விமானத்திலேயே முதல் சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த சம்பவம் பற்றி விசாரித்தபோது விமான அதிகாரி ஒருவர் இந்திய வான மண்டலத்தில் இம்மாதிரி காற்று சூன்யப்பகுதிகள் ஏற்படுவது அபூர்வம் என்றார்.

பணம் பறிகொடுத்த குடும்பமே தற்கொலை

ஐதராபாத்தில் பரிதாபச் சம்பவம்

வாரங்கல்லில் சிறு கடை ஒன்று வைத்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த குடும்பம் ஒன்று ஐதராபாத் பட்டணம் வந்தது.

வந்த இடத்தில் கொண்டுவந்த பணத்தை திருட்டுக்கொடுத்து விட்டிருக்கிறார் குடும்பத் தலைவர். விவைவு, உடன் அவர் தான், மனைவி, தனது 14 வயதுப்பெண் ஆகிய மூவரும் தற்கொலை செய்துகொள்வது என்று முடிவு செய்து அவ்வாறே விஷமருந்திச் செத்துப்போனார்களாம்.

சாவதற்குமுன் குடும்பத்தில் கடைசியான 10 வயதுப் பையனிடம் விவரங்களை எழுதிய கடிதத்தைத் தந்துவிட்டுச் சென்றுள்ளனராம்.

மூன்று பிணங்களையும் கடிதத்தோடு பையனையும் கண்ட போலீசார் புலன் விசாரணை செய்துவருகின்றனராம்.

திருத்தம்

3-ம் பக்கத்தில் 'அமைதி நிலை நாட்டுவீர்' என்ற தலைப்பில் 'ஏ. பி. பனிச்சாமி' என்பதை 'ஏ. பி. பழனிச்சாமி' என திருத்தி வாசித்துக்கொள்ள வேண்டுகிறோம். (ஆ-ர்.)

கர்நாடக மாநிலம் எனப் பெயரை மாற்றுக

மைசூர் சட்டசபையில் தீர்மானம்

பெங்களூர், ஜூன் 5—

மைசூர் மாநிலத்தின் பெயரை கர்நாடக மாநிலம் என்று மாற்றுமாறு மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் கோர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் மூன்று தனி நபர் தீர்மானங்கள் மைசூர் சட்டசபையில் தாக்கலாகியுள்ளன என்று தெரிய வருகிறது.

இவை வரும் ஜூன் 21-ந் தேதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிய வருகிறது.

விஷஜுரம் பரவாமல் தடுக்க சினிமாக்கள் மூடப்படும்!

சென்னை, ஜூன் 6—

நகரில் புளூ ஜுரம் மேலும் பரவாமல் தடுக்கும் பொருட்டு ஒரு வார காலத்துக்கு நகர சினிமாக்கள் அத்தனையும் மூடப்படலாம்.

இவ்விஷயம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் தீவிர யோசனையில் இருந்து வருகிறது. எற்கனவே புளூ ஜுரம் பரவியுள்ளதன் காரணமாக நகர சினிமாக் காட்சிகளின்மீது சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. பிற்பகல் (மேட்னி) காட்சிகள் தடை செய்யப்பட்டிருக்கின்றன. மாலை காட்சி இரவு 7-00 மணிக்கே துவங்கலாம் என்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. இந் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை. நகர சினிமா கொட்டகைகளில் கும்பல் குறைந்தபாட்டைக் காணோம்.

இவை யாவும் சுகாதார அதிகாரிகள் மேலும் தங்கள் கட்டுப்பாடுகளை அதிகரிக்குமாறு செய்துள்ளன. சினிமா காட்சி தடை பற்றிய உத்தரவு விரைவில் வரும் என்றும் கருதப்படுகிறது.

துணைப் பொதுச்செயலாளர்

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

★

ஜூன் 9: காலை—சேலம் (திருமணம்) மாலை — காவேரிப்பட்டணம்பொதுக்கூட்டம்

10: சென்னூர்க்கல் பாளையம் (தாராபுரம்)

11: தர்மங்கலம் (ஈரோடு ஊர்)

12: மணத்திடல் சருப்பூர் (தஞ்சை மாவட்டம்)

13: மதுக்கூர் (தஞ்சை மாவட்டம்)

14: தெலுங்கன்குடிக்காடு (தஞ்சை மாவட்டம்)

திருமணங்கள்

★

9—6—57 காலை 8 மணிக்குள், சென்னை - தியாகராய நகர், வெங்கட்ட ராமய்யர் தெரு, 6-எண்ணுள்ள மனையில், தோழர் டி. ஏ. திருஞானசம்பந்தன்—தோழியர் டி. ஆர். சேதுலட்சுமி வாழ்க்கை ஒப்பந்த விழா, அன்று அவர்கள் தலைமையில் நடைபெறும்; பலர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

9-6-57 காலை 8-30 மணிக்கு, காஞ்சி தோழர் ஏகாம்பரம் — தோழியர் லலிதா வாழ்க்கை ஒப்பந்த விழா, பெரியகாஞ்சிபுரம் இராசவீதி, எண். 45-பி. 'அசோகா ஐஸ் கம்பெனி' இல்லத்தில், திரு. ஈழத்தடிகள் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் அன்னல் தங்கோ, ம. கி. தசரதன், அரு. முருகேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

9—6—57 காலை 9-30 மணிக்கு உலகங்காத்தான் தோழர் தங்கவேலு—தோழியர் அங்கம்மாள் வாழ்க்கை ஒப்பந்த விழா, வழக்கறிஞர் தோழர் இரே. இளம்வழுதி அவர்கள் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

9—6—57 காலை 9 மணிக்கு, ஆதிவராக நத்தம் தோழர் இராசா—தோழியர் சரோசா வாழ்க்கை ஒப்பந்தவிழா, தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., தில்லை - வில்லாளன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

9—6—57 காலை 7 மணிக்கு, சிறுபாக்கம் தோழர் ப. பூமாலை - தோழியர் க. பவுனும்பாள்

வாழ்க்கை ஒப்பந்த விழா, புலவர் மா. முத்தழகன் அவர்கள் தலைமையில், நல்லூர் மணமகள் இல்லத்தில் நடைபெறும்; தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

9—6—57 காலை 9-30 மணிக்கு வேலூர் வட்டம் - கருகம்பத்தூர் கிராமம், மேலண்டை வீதி, 1/91 எண்ணுள்ள இல்லத்தில், தோழர் எஸ். நாகப்பன்—தோழியர் அன்னம்மாள் வாழ்க்கை ஒப்பந்த விழா, தோழர் எம். பி. சாரதி, எம். எல். ஏ., அவர்கள் தலைமையில் நடைபெறும்; தோழியர் சத்தியவாணி முத்து, எம். எல். ஏ., தோழர் அ. கருந்தோவியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

9—6—57 காலை 9 மணிக்கு, காஞ்சி தோழர் மணிவண்ணன் - தோழியர் கிருட்டிண வேணி வாழ்க்கை ஒப்பந்த விழா, பெரிய காஞ்சிபுரம் தானப்ப நாயகர் தெரு, 11-ம் எண்ணுள்ள இல்லத்தில், மகாவித்துவான் மே. வி. வேணுகோபால் (பிள்ளை) அவர்கள் தலைமையில் நடைபெறும்; பலர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

9—6—57 காலை 9 மணிக்கு, வேலூர் வட்டம் - அப்புக்கல் சிற்றூர் தோழர் ல. சுப்பிரமணியன் —தோழியர் ஆ. அலர்மேலு வாழ்க்கை ஒப்பந்தவிழா தோழர் போளூர் - சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

9—6—57 காலை 9 மணிக்கு, குலக்கரை தோழர் குருமூர்த்தி - தோழியர் சுப்புலட்சுமி வாழ்க்கை ஒப்பந்த விழா, சாத்தூர் - சங்கு சேர்வை தெரு, 3/166 மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

* * *

9—6—57 காலை 9 மணிக்கு, விருதுநகர் தோழர் இலக்குமணன் - தோழியர் இரத்தின காந்தி வாழ்க்கை ஒப்பந்த விழா, விருதுநகர் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

* * *

9—6—57 காலை 9 மணிக்கு சென்னை—முத்தியாலுபேட்டை, சைவமுத்தையா முதலித் தெரு, 4-ம் எண் ஏ. ஆர். சி. ஆரம்பப் பள்ளியில் தோழர் பொ. இராசவன்—தோழியர் கு. இராணி வாழ்க்கை ஒப்பந்த விழா தோழர் வி. முனுசாமி தலைமையில் நடைபெறும்; தோழர்கள் அ. பொ. அரசு, ஏ. எஸ். வேணு, இராமதாஸ், து. தமிழ்செல்வன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

9—6—57 காலை 10 மணிக்கு சித்துக்காடு தோழர் கே. வி. இளந்திரையன்—தோழியர் திருபுரவல்லி வாழ்க்கை ஒப்பந்தவிழா தோழர் அறிவுடைநம்பி அவர்கள் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

கழகக் கூட்டங்கள்

★

வேலூர்:

(வடாற்காடு மாவட்டம்)

கசப்பா உயர்நிலைப் பள்ளியருகில்

9—6—57 மாலை 6 மணிக்கு

தலைவர்: அ. கருந்தோவியன்

பேசுவோர்:

சத்தியவாணிமுத்துஅம்.எல்.ஏ.

சந்தானம் எம்.எல்.ஏ.

மா. பா. சாரதி எம்.எல்.ஏ.

போளூர்-சுப்பிரமணியம்

(மாலை 4 மணிக்கு ஓர் ஊர்வலம் புறப்பட்டு முக்கிய இடங்களில் கொடியேற்று விழாவும், எம்.எல்.ஏ.-க்களுக்குப் பாராட்டிதழ் வழங்குதலும் நடைபெறும்.)

★

உலகங்காத்தான்:

(கள்ளக்குறிச்சி வட்டம்)

மாரியம்மன் கோவில் முன்பு

9—6—57 மாலை 5 மணிக்கு

பேசுவோர்:

இரே. இளம்வழுதி

மு. பாண்டியன்

★

ஆலந்தூர்:

தருமராசா கோவில் எதிரில்

9—6—57 மாலை 6-30 மணிக்கு

தலைவர்: நெல்லை-புகாரி

பேசுவோர்:

ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ

அலமேலுஅப்பாதுரை

கோ. இளவரசு

கனி

★

ஆதிவராகநத்தம்:

(சிதம்பரம் வட்டம்)

பெருமாத்தூர் கடைத் தெருவில்

9—6—57 மாலை 6 மணிக்கு

தலைவர்: தில்லை-வில்லாளன்

பேசுவர்:

சி. பி. சிற்றரசு

★

குன்னத்தூர்:

தேர் திடலில்

9—6—57 இரவு 7 மணிக்கு

பேசுவோர்:

மீ.சு. இளமுருகுபொற்செல்வி

க. தமிழரசன்

★

திண்டுக்கல்:

காந்தியார் திடலில்

9—6—57 இரவு 7 மணிக்கு

தலைவர்: பி. கந்தசாமி

பேசுவோர்:

என். முத்து

ஏ. சுப்பையா

எம். ஏ. ஜான்

★

கோவை:

புலியகுளம் மாரியம்மன் கோவில் திடல்

9—6—57 மாலை 6 மணிக்கு

பேசுவர்:

க. அன்பழகன் எம். எல். ஏ.,

★

ஆர். எஸ். புரம் பரியல் மைதானத்தில்

9—6—57 இரவு 7-30 மணிக்கு

பேசுவர்:

க. அன்பழகன், எம். எல். ஏ.,

நடையநல்லூர் தி. மு. கழகப் பொது உறுப்பினர்களுக்கு:

9—6—57 இரவு 8 மணிக்கு தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் (கடை வீதிக்கு மாற்றப்பட்டுள்ள புதிய) கழகப் பணிமனையில் நடைபெறும்; அது போது பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும். உறுப்பினர்கள் தவறாது வருகைதர வேண்டப்படுகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. செழியன் எம்.ஏ., அவர்களால் சுதந்திர அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் இரா. செழியன் எம்.ஏ.

****

சிறப்புக்கூட்டம்

★

9-6-'57 ஞாயிறு காலை 9 மணி: சென்னை, கோகலே மண்டபத்தில்

தலைவர்: க. அறிவழகன், எம்.ஏ.,

சொற்பொழிவாளர்கள்:

கண்ணதாசன்: (உலகம் இவ்வளவுதான்!)

கி. மனோகரன், M.A.: (அபாய அறிவிப்பு)

டி. கே. சீனிவாசன்: (தத்துவ வரலாறு)

நன்கொடை: ரூ. 1; அணா 8

—சிந்தனையாளர் கழகம், சென்னை-1

****